விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 020 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 24 வியாழக்கிழமை (08.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## - கனமழை கொட்டித் தீர்க்கும் -

# யாழ்ப்பாணம் இதுவரை எதிர்கொள்ளாத பேரழிவைச் சந்திக்கும் அபாயம்

## பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)
தற்போது உருவாகியுள்ள காற்றமுத்தத் தாழ்வு மண்டலத்தால் யாழில் 650 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## ஒரு வார்த்தைப் பிழைக்காக

# பிரதமரைப் பதவி விலக கோருவது நெறிமுறையல்ல

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)
ஒரு வார்த்தைப் பிழைக்காக பிரதமர் ஹரிணியை பதவி விலகக் கோருவது நெறிமுறையற்ற செயல் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் பட்டத்துடன் பறந்த இளைஞன்

## வல்வெட்டித்துறையில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)
தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில்

15ஆம் பக்கம் பார்க்க

## பெப்ரவரி 27, 28ஆம் திகதிகளில்

# கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

## மாவட்டச் செயலகத்தில் இன்று முன்னாயத்தக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
கச்சதீவு புனித அந்தோனியார்

15ஆம் பக்கம் பார்க்க

# சட்டவிரோத மது அருந்திய 7 பேர் இதுவரை மரணம்

## 8 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை

(புத்தளம்)
புத்தளம் வென்னப்புவ பகுதியில் சட்டவிரோத மது பானம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 8 பேர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் ஒரு ஆண் மற்றும் இரு

15ஆம் பக்கம் பார்க்க

# ஊர்காவற்றுறை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்துச் சாரதி மீது தாக்குதல்

## நடவடிக்கை எடுக்காவிட்டால் நாளை தீவகத்தில் பேருந்து சேவை முடக்கம் என எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்துச் சாரதி மீது தாக்குதல் சம்பவம் ஒன்று அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருகையில்,

நேற்று மாலை யாழ்ப்பாணம்

16ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவு, காரைநகரில் கைது செய்யப்பட்ட

# 23 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
இலங்கைக் கடற்பரப்பான நெடுந்தீவு மற்றும் காரைநகர் கடற்பரப்புகளில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 23 மீனவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு

15ஆம் பக்கம் பார்க்க

# கடலுக்குச் செல்ல வேண்டாம்

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
மறு அறிவித்தல் வரை

15ஆம் பக்கம் பார்க்க

## பல்வேறு குற்றங்களுக்காக

# தேடப்பட்டு வந்த நபர்

## காரைநகரில் போதைப்பொருளுடன் கைது

(யாழ்ப்பாணம்)
யாழில் பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் காரைநகரில் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் காரைநகர் கசூரினா கடற்கரைக்குச் செல்லும் புது வீதிச் சந்தியில் உள்ள

16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்பு செயன்முறை
## ஜேர்மனி - இலங்கை இடையே ஒப்பந்தம்

(கொழும்பு)

ஜேர்மனி மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையே கடன் மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செய்யும் செயற்பாட்டில் இது முக்கிய மைல்கல்லாக அமைவதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் வழங்குநர் குழுவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இருதரப்பு கலந்துரையாடல்களில் நிலுவையிலுள்ள கடனை மறுசீரமைப்பதன் மூலம் கடன் நிவாரணம் வழங்க ஜேர்மனி அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட கடன் தொகை 188 மில்லியன் யூரோக்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் ஜேர்மனி - இலங்கை இடையிலான வலுவான மற்றும் நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்த உதவும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

### இவ்வாண்டின் முதல் நான்கு நாட்களில்
# 33 ஆயிரத்துக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தின் முதல் நான்கு நாட்களில் 33,076 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தின் முதல் நான்கு நாட்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 5,065ஆகும்.

அத்துடன் ரஷ்யாவிலிருந்து 3,948 சுற்றுலாப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 2,914 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 2,862 சுற்றுலாப் பயணிகளும் அவுஸ்திரேலியாவிலிருந்து 1,790 சுற்றுலாப் பயணிகளும் போலந்திலிருந்து 1,658 சுற்றுலாப் பயணிகளும் அமெரிக்காவிலிருந்து 1,137 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ம-7)

### கணேமுல்ல சஞ்சீவ கொலைவழக்கு
# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தக்சி உட்பட இருவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பாதாள உலகக்குழுத் தலைவன் எனக் கூறப்படும் கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி என்பவருக்கு உதவி ஒத்தாசை வழங்கியமை மற்றும் தங்குமிட வசதி வழங்கியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நந்தகுமார் தக்சி உள்ளிட்ட இருவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த இரு சந்தேக நபர்களையும் ஜனவரி மாதம் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

90 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த இரண்டு சந்தேக நபர்களையும் நேற்று (07) கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

இதனையடுத்து சந்தேக நபர்களை ஜனவரி மாதம் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கும் நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### ரூ. 7 கோடி பெறுமதியான
# போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)

சுமார் 7 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதைப் பொருளுடன் நாட்டிற்கு வந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று (7) கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணப் பொதிக்குள் சூட்சுமமாக மறைத்து போதைப் பொருளைக் கடத்த முற்பட்ட போதே விமான நிலைய சுங்கப் பிரிவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் நீர்கொழும்பு, குடாபாடுவ பகுதியில் சுற்றுலா விடுதி ஒன்றை நடத்தி வரும் ஜா-எல பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் இந்தப் போதைப்பொருளை தாய்லாந்தின் பெங்கொக் நகரில் இருந்து இந்தியாவூடாகக் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வந்த நிலையிலேயே அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 09 - 03 - 1939



விண்ணில் 08 - 01 - 2025

அமரர்
### அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை
(ஓய்வுநிலை தபாலதிபர்)

காலையில் எழுந்து பரபரப்பாய் பணிபுரிந்து
கண்ணிமைக்கும் நேரத்தில் எமைவிட்டுப் பிரிந்ததேனோ!
ஆறவில்லை எம் துயரம், மறக்கமுடியவில்லை உம் வதனம்
முற்றத்தில் நீங்கள் வளர்த்த மரங்கள் பசுமையாய் இருக்க,
வையகத்தில் வாழ்ந்தது போதும் என இறைவன் அழைத்தாரோ
ஆராத்துயருடன் நீங்கள் காட்டிய வழியில் தொடரும் எம் பயணம்
எம் உயிர் உள்ள வரை மறவாது உமக்காய்
தினமும் இறைவனை வேண்டிடுவோம் எம் குல விளக்கே!
கலங்கரை விளக்காய் எமக்கு ஆசி அளித்திடுவீர்.
இறைவன் சந்நிதியில் உம் ஆன்மா சாந்தி அடைவதாக...

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-4769)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின்
எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=




தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விளக்குகளுக்கான கட்டணத்தை
# மக்களிடம் அறவிடத் திட்டம்

(கொழும்பு)

**உத்தேச புதிய மின்சாரக் கொள்கையின் ஊடாக, தமது பிரதேசத்தில் உள்ள வீதி விளக்குகளுக்கு ஏற்படும் செலவை அப்பிரதேச மக்களின் மின்சாரக் கட்டணத்தில் அறவிடுவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக மின் பாவனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து அச்சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக தெரிவிக்கையில்,

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் வீதி விளக்குகளின் "வோட்" அளவைக் கணக்கிட்டு, அத்தொகையை அப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களிடையே பகிர்ந்து, அவர்களின் மின்சாரக் கட்டணத்துடன் இணைக்க முயற்சிக்கப்படுகிறது.

இவ்வாறு சேர்க்கப்படும் தொகையானது, பாவனையாளரின் மின்சாரக் கட்டணப் பெறுமதியில் 2.2% இற்கு மேற்படாத ஒரு தொகையாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீதி விளக்குகளைப் பராமரிக்கும் மற்றும் முகாமைத்துவம் செய்யும் அதிகாரம் தற்போது பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபைகள் வசமே உள்ளது.

எனினும், புதிய யோசனையின் ஊடாக இந்த அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து நீக்கி, அதனை நிர்வகிக்கத் தனியானதொரு நிறுவனத்தை உருவாக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி)

## சர்ச்சைக்குரிய பாடம் நீக்கம்
# பிரதமர் அறிவிப்பு



(கொழும்பு)

சர்ச்சைக்குரிய விடயங்களைக் கொண்ட தரம் 6 ஆங்கிலப் பாடப்புத்தகத்தில் உள்ள குறிப்பிட்ட பாடத்தை நீக்குவதற்கு தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான அனுமதி நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாகக் கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்றுப் புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். (நி)

# வெனிசூலா போர் பதற்றத்தால்
## எரிபொருள் விலைகளில் ஏற்ற இறக்கங்கள்
### அமைச்சர் நளிந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

வெனிசூலா மீதான அமெரிக்காவின் தாக்குதல் காரணமாக உள்நாட்டு எரிபொருள் விலைகளிலும் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், வெனிசூலா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து உலக சந்தையில் எரிபொருள் விலையில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கையில் எரிபொருள் விலையில் ஏற்படக்கூடிய துல்லியமான தாக்கத்தை அரசாங்கத்தினால் தற்போது கணிக்க முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சில குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில் ஏற்கனவே ஏற்ற இறக்கங்கள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில், சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப நிதி அமைச்சு மற்றும் ஏனைய துறைசார் அமைச்சுகள் கலந்துரையாடி தகுந்த தீர்மானங்களை எடுக்கும் என அமைச்சர் விளக்கமளித்துள்ளார். (நி)

## விடைத்தாள் மதிப்பீட்டிற்கான
# விண்ணப்பம் கோரல்
### இறுதித் தினம் இன்றாகும்

(கொழும்பு)

2025 (2026) ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காகப் பரீட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.ஜே.எஸ். இந்திகா குமாரி லியனகே விடுத்துள்ள விசேட ஊடக அறிவித்தலில் இது குறித்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தள முகவரியூடாக மாத்திரமே இணையவழி முறையில் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பங்கள் கடந்த 2025.12.25 ஆம் திகதி முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இன்றைய தினம் இதற்கான இறுதி நாளாகும் என பரீட்சைகள் திணைக்களம் நினைவூட்டியுள்ளது. (நி)

# விடைபெறுகிறார் ஜூலி சங்

(கொழும்பு)



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக சுமார் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய ஜூலி சங் எதிர்வரும் 16ஆம் திகதி தனது பதவியிலிருந்து விடைபெற்று இலங்கையிலிருந்து புறப்படவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார்.

2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கான தூதுவராகப் பொறுப்பேற்ற அவர், இலங்கையின் மிகவும் நெருக்கடியான காலகட்டங்களில் அமெரிக்காவுடனான உறவை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றினார்.

தனது பிரியாவிடை செய்தியில், தனது பணிக் காலத்தின் முதல் நாளிலிருந்தே அமெரிக்காவின் நலன்களை மேம்படுத்துவதும், அமெரிக்க மக்களுக்குப் பயனுள்ள உறவைக் கட்டியெழுப்புவதுமே தனது பிரதான நோக்கமாக இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமான, திறந்த மற்றும் பாதுகாப்பான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்ற முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் மாற்றங்களின் போது ஜூலி சங் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளில் பல மைல்கற்களை அவர் தனது பணிக் காலத்தில் எட்டியுள்ளார். (நி)

# தேசிய பாடசாலை ஆசிரியர்களின்
# இடமாற்ற உத்தரவு வெளியானது
### மேன்முறையீடு செய்யவும் அவகாசம்

(கொழும்பு)

25 ஆம் ஆண்டுக்கான தேசிய பாடசாலை ஆசிரியர்களின் வருடாந்த மற்றும் கட்டாய இடமாற்ற உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்த மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகளையும் அமைச்சு வெளியிட்டுள்ளது.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.ஜே.எஸ்.எஸ். எதிரிசூரிய விடுத்துள்ள அறிவித்தலின்படி, ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான இடமாற்ற உத்தரவுகள் நேற்று முன்தினம் முதல் இணையத் தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் nstt.moe.gov.lk என்ற இணையத்தளம் ஊடாக தமது இடமாற்ற விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வழங்கப்பட்டுள்ள இட மாற்றங்கள் குறித்து ஆட்சேபனை உள்ள ஆசிரியர்கள், அதே இணையத்தளம் வாயிலாக வருடாந்த இடமாற்ற மீளாய்வுக் குழுவிடம் மேன்முறையீடு செய்ய முடியும்.

இணையவழி மூலம் மேன்முறையீடு செய்வதற்கான இறுதி திகதியாக இம்மாதம் 20 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இணையவழியில் விண்ணப்பித்த பின்னர், அதன் அச்சுப்பிரதியை உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தாம் வேதனம் பெறும் பாடசாலையின் அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும்.

அதிபர்கள் தமது பரிந்துரைகளை 22 ஆம் திகதிக்குள் இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும். அத்துடன், அச்சுப் பிரதிகளை ஜனவரி 27 ஆம் திகதிக்குள் கல்வி அமைச்சின் இடமாற்றக் கிளைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஏற்கனவே இடமாற்ற உத்தரவு பெற்று, அதனை நடைமுறைப்படுத்தாத அல்லது காலம் நீடிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, 2025 ஆம் ஆண்டுக்கான புதிய உத்தரவு வழங்கப்பட்டிருந்தால் அவர்களின் பழைய உத்தரவுகள் செல்லுபடியற்றதாகக் கருதப்படும் என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, தொழில்நுட்பக் கோளாறுகள் இருப்பின் 011 207 5854 என்ற எண்ணிற்கும், இடமாற்றம் தொடர்பான விபரங்களுக்கு 011 278 4837 என்ற எண்ணிற்கும் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ரி-20 உலகக் கிண்ண தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு




ஐசிசி இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான 15 பேர் கொண்ட பங்களாதேஷ் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி லிட்டன் தாஸ் தலைமையிலான குறித்த குழாமில் சைஃப் ஹசன், நூருல் ஹசன், தன்சித் ஹசன், பர்வேஸ் ஹொசைன் எமோன், தவ்ஹித் ஹ்ரிடோய், ஷமிம் ஹொசைன், ரிஷாட் ஹொசைன், நசும் அஹமட், மெஹதி ஹசன், முஸ்தபிசுர் ரஹ்மான், டஸ்கின் அஹமட், ஷொரிஃபுல் இஸ்லாம், தன்சிம் ஹசன் சகிப் மற்றும் மொஹமட் சைஃபுதீன் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை சமீபத்தில் இந்தியன் பிரீமியர் லீக் தொடரிலிருந்து முஸ்தபிசுர் ரஹ்மான் விடுவிக்கப்பட்ட விவகாரம் பெரும் பேசுபொருளாகியுள்ளது.

இந்தநிலையில் ரி- 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் போது, இந்தியாவில் நடைபெறவுள்ள போட்டிகளில் பங்கேற்க பங்களாதேஷ் அணி மறுப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் இணைந்தார் முஸ்தபிசுர் ரஹ்மான்!




இந்தியப் பிரீமியர் லீக் (IPL) தொடரில் இருந்து நீக்கப்பட்ட பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிசுர் ரஹ்மான், தற்போது பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற இந்தியப் பிரீமியர் லீக் ஏலத்தில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முஸ்தபிசுர் ரஹ்மானை 9.20 கோடி இந்திய ரூபாவிற்கு ஏலத்தில் எடுத்தது. இருப்பினும், அண்டை நாடான பங்களாதேஷுடன் நிலவும் தற்போதைய அரசியல் சூழல் உள்ளிட்ட விடயங்களை சுட்டிக்காட்டி, அவரை அணியிலிருந்து விடுவிக்குமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, முஸ்தபிசுர் ரஹ்மான் இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டார்.


இதற்குப் பதிலடியாக, இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளை தமது நாட்டில் ஒளிபரப்ப பங்களாதேஷ் அரசாங்கம் தடை விதித்தது.

இந்த சர்ச்சைகளுக்கு மத்தியில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதன்படி, முஸ்தபிசுர் ரஹ்மான் அடுத்த பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் விளையாடுவார் என்று அதன் அதிகாரப்பூர்வ 'X' தளத்தில் உறுதிப்படுத்தியுள்ளது.

இன்னும் இதற்கான வீரர்கள் ஏலம் நடைபெறாத நிலையிலும், அவர் இந்த தொடரில் பங்கேற்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (3)

## பதவி விலகும் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர்




இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் சனத் ஜயசூர்ய, வரவிருக்கும் ரி-20 உலகக் கிண்ணத்திற்குப் பிறகு தனது பதவியில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார்.


தலைமைப் பயிற்சியாளராக தனது ஒப்பந்தம் இன்னும் செல்லுபடியாகும் என்றாலும், தலைமை பயிற்சியாளராகத் தொடரும் எண்ணம் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

ஜயசூர்ய முதலில் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார், ஆனால் அந்த ஆண்டின் இறுதியில் முழுநேர அடிப்படையில் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

ஜயசூர்ய தலைமை பயிற்சியாளராக இருந்த காலத்தில், இலங்கை அனைத்து வடிவங்களிலும் சேர்த்து 60 போட்டி களில் விளையாடியுள்ளது, 29 போட்டிகளில் வெற்றியும் 29 போட்டிகளில் தோல்வியும் அடைந்துள்ளது.

அத்தோடு, அவரது காலத்தில் வெற்றி, தோல்வி இன்றி முடிவடைந்த போட்டிகளின் எண்ணிக்கை இரண்டு ஆகும். (3)

## இலங்கை அணியுடன் இணைகிறார் இந்தியாவின் துடுப்பாட்ட பயிற்சியாளர்



ஐசிசி இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு முன்னதாக, இந்திய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் விக்ரம் ரத்தோர் இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக இணையவுள்ளார்.

இவர் 2024 ஆம் ஆண்டு வரை இந்தியத் தேசிய அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக பணியாற்றினார்.

தற்போது ஐபிஎல் தொடரின் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உதவி பயிற்றுவிப்பாளராக உள்ளார்.

எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி அவர் இலங்கை அணியுடன் இணைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரின் போது அணியுடன் இணையும் அவர், இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடர் நிறைவடையும் வரை இலங்கை அணியின் துடுப்பாட்ட பிரிவைப் பலப்படுத்தும் நோக்கில் பணியாற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேர்.பொன் அருணாசலம் நினைவு தினம் நாளை ஜனாதிபதி செயலகத்தில்

(கொழும்பு)

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலும், இலங்கையின் அரசியல் மறுமலர்ச்சியிலும் மிகமுக்கியமான ஒரு ஆளுமையும், கொடைவள்ளலுமான சேர்.பொன் அருணாசலத்தின் 102 ஆவது நினைவு தினம் நாளை 9 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சேர்.பொன் அருணாசலம் நிதியத்துடன் இணைந்து, கொழும்பு வடக்கு சைவ பரிபாலன சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

சேர்.பொன் அருணாசலம், பிரித்தானியர்களால் இலங்கை அரச பணிக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமைக்குரியவராவார். 1919ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸின் முதல் தலைவராக ஏகமனதாகத்



தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்.பொன் அருணாசலம் தமிழர் - சிங்களவர் ஒற்றுமைக்காக அரும் பாடுபட்டார்.

இலங்கைக்கெனத் தனிப் பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, "இலங்கை பல்கலைக்கழகச் சங்கம்" உருவாகக் காரணமாக இருந்ததனால் இவர் "இலங்கை பல்கலைக்கழகக் கல்வியின் தந்தை" எனப் புகழப்படுகிறார்.

இவரது சேவையைப் பாராட்டி பிரித்தானிய அரசு 1913ஆம் ஆண்டு "சேர்" பட்டம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி)

# பதுக்கிய அரிசி மூடைகள் ஏலத்தில் விற்பனை

## நுகர்வோர் அதிகாரசபை அதிரடி

(கொழும்பு) சந்தையில் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி அரிசியை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர்களை இலக்கு வைத்து பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 5,000 அரிசி பொதிகள் வெளிப்படையான ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் 6.3 மில்லியன் ரூபாவிற்கும் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இத்தகைய சட்டவிரோத பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு இந்தச் செயல்முறை ஒரு கடுமையான எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

நுகர்வோரை ஏமாற்றி அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை உயர்த்த முயலும் மோசடியாளர்களைக் கட்டுப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

இதன் மூலம் சந்தையில் நியாயமான வர்த்தக நடைமுறைகளை உறுதிப்படுத்த அரசாங்கம் முயல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிக்கல்

## ஓய்வூதியத்தை ரத்து செய்யும் சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான, 'பாராளுமன்ற ஓய்வூதிய சட்டமூலம்' பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவினால் இந்தச் சட்டமூலம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நிறுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மீண்டும் எகிறியது டொலர்

(கொழும்பு)

இலங்கையின் மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலரின் பெறுமதி ரூ. 310 ஐத் தாண்டியுள்ளது.

இதன்படி அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி ரூ. 306 ரூபாய் 28 சதமாகவும் விற்பனை பெறுமதி 313 ரூபாய் 81 சதமாகவும் பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 29 ஆம் திகதிக்குப் பிறகு, அமெரிக்க டொலரின் பெறுமதி 310 ரூபாயைத் தாண்டுவது இதுவே முதல் முறையாகும். (நி)

## 'கிரெகரி' ஏரியில் விழுந்த விமானம் தரையிறங்கும் போது விபரீதம்



(ஹற்றன்)

நுவரெலியா கிரெகரி ஏரியில் தரையிறங்கத் தயாராக இருந்த நீர் விமானம் ஒன்று, ஏரிக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்து நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்ற போது விமானத்தில் சிலர் இருந்துள்ளதாகவும், அவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

### நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு இலங்கை பொலிஸ் அதிகாரிகள்

## 50 மில்லியன் ரூபா நன்கொடை

(கொழும்பு)

'Rebuilding Sri Lanka' நிதியத்திற்கு பொலிஸ் அதிகாரிகள் தமது ஒரு நாள் சம்பளத்தை நன்கொடையாக வழங்கினர்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவும் ஆரம்பிக்கப்பட்ட 'Rebuilding Sri Lanka' நிதியத்திற்கு இலங்கை பொலிஸ் அதிகாரிகள் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை நன்கொடையாக வழங்கினர்.

இதன்படி ரூ. 50 மில்லியன் நிதி திரட்டப்பட்டதோடு அதற்கான காசோலையை பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய நேற்று முன்தினம்



ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமார நாயக்கவிடம் வழங்கினார். (நி)

### பாரிய பிரச்சினையாக உருவெடுக்கும்

## சட்டவிரோத மதுபானம்

### தடுக்க உடனடி நடவடிக்கை அவசியம்

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோத மதுபான நுகர்வு 300 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள உலகளாவிய தரவுகளின்படி, இலங்கையில் மது அருந்துதல் 95 சதவீதம் அதிகரித்துள்ளது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளபடி, இலங்கையில் மொத்த மது அருந்துதலில் 37 சதவீதம் சட்டவிரோத மதுபானமாகும்.

உள்ளூர் சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, சட்ட விரோத மதுபான நுகர்வு அதிகரிப்பு விரைவில் இலங்கைக்கு ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுக்க கூடும்.

எனவே, சட்டவிரோத மதுபான பயன்பாட்டைக் குறைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடை முகாமும் இலவச மருத்துவ பரிசோதனையும்

(யாழ்ப்பாணம்)

தாய் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாமும் இலவச மருத்துவ பரிசோதனையும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மாவைக் கலட்டி தெல்லிப்பளை, காந் திஜி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. குருதிக்கொடை வழங்க விரும்புவோர் 076 841 7111 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8)



அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் சட்டத்தரணியுமான அமரர் குமார் பொன்னம்பலத்தின் 26 ஆவது ஆண்டு நினைவு தினம் கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள அறிவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:- சிவசாந்தன்)

# இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீரிழிவு கழகம் நடாத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை கல்வியங்காட்டுச் சந்தை எம்.ஜி.ஆர் சிலைக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல்திணிவுச் சுட்டி போன்ற பரிசோதனைகள் இடம்பெற்று வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. (8)

# பகிரங்க ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏலவிற்பனை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு நீதி மன்ற வாளகத்தில் நடை பெறவுள்ளது எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

அத்துடன் 2025 ஆம் ஆண்டு ஆலய மஹோற்சவ காலத்தில் இடம்பெற்ற தெய்வீக கலை நிகழ்வில் பங்குகொண்ட மாணவர்களுக்கும் அவர் களை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. (8)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். (8)

# மாணிக்கவாசகர் மடாலய நூற்றாண்டு ஆரம்ப விழா



(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயத்தின் 100ஆவது ஆண்டு ஆரம்ப விழா கடந்த 1ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மாணிக்கவாசகரின் பக்திப் பாராயணங்கள் இசைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து மாணிக்கவாசகரின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாணிக்கவாசகர் மடாலயம் பற்றிய உரையை தொழிலதிபர் ஈ.எஸ்.பி நாகரத்தினம் ஆற்றினார். மாணிக்கவாசகர் மடாலயத்தின் குருக்களான ஈஸ்வரக்குருக்கள் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

போசகரும், உப செயலாளருமான க.கு.க சிவபாலனும் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். (8)

# வேலணை பிரதேச செயலகத்திற்கு புதிய உதவிப் பிரதேச செயலாளர்



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலகத்திற்கு புதிய உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட பாமா மோகனமுரளி நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் அவர்களிடம் தமக்கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

அவர் அன்றைய தினமே வேலணை பிரதேச செயலகத்தில் தமது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார். (8-33)

# சுயதொழில் முனைவோர்களுக்கான கருத்தரங்கு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் நாளை வெள்ளிக்கிழமை சுயதொழில் முனைவோர்களை வலுவூட்டும் நோக்கில் நிதியியல் கல்வியறிவு தொடர்பான கருத்தரங்கு காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கு சரியான நிதி முகாமைத்துவத்தின் அத்தியாவசியம் பற்றியும் நிதி மோசடி நிறுவனங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது பற்றியும் சிறந்த அறிவூட்டலை வழங்கி தமது சுயதொழில் முயற்சியாண்மையில் நிலைபேறான வெற்றியினை அடையச்செய்வதே இக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

மேற்படி கருத்தரங்கில் மத்திய வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் வளவாளர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே மேற்படி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் சுயதொழில் முனைவோர் நாளைய தினம் நேரடியாக கலந்து கொண்டு பயன்பெறமுடியும் எனப் பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார்.

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 700 | 450 | 300-400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 160 | -- |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 900 | 800 | 900 |
| தக்காளி | 600 | 500 | 600 | 550 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 150 | 350 | 90 |
| கோவா | 300 | 350 | 300 | -- | 250 |
| கரட் | 400 | 600 | 600 | 500 | 450 |
| பூசணி | 160 | 120 | 200 | -- | 160 |
| புடோல் | 300 | 300 | 300 | 300 | 230 |
| வாழைக்காய் | 150 | 120 | 200 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 180 | -- |
| பாகற்காய் | 600 | 600 | 1000 | 600 | 450 |
| வெண்டக்காய் | 400 | 200 | 400 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 350 | -- | 300 |
| பயற்றங்காய் | 350 | 700 | 600 | 450 | 300 |
| லீக்ஸ் | 400 | 600 | 600 | -- | 450 |
| பீற்றூட் | 800 | 1000 | 1000 | 900 | 800 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 1000 | 800 | 900 |
| முருங்கைக்காய் | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 500 | 800 | 500 | 550 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 600 | 400 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 200 | 150 | -- | 130 |
| தேசிக்காய் | 400 | 400 | 200 | 300 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 120-170 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | -- | 475 |
| வெங்காயப்பூ | 800 | 1000 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 300 | 250 | 170 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 80 | 100 | 100 | -- | 45 |
| [illegible] | 100 | 100 | 150 | -- | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்டார் சஜித்

(கொழும்பு)

கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திடும் பணியை எதிர்க்கட்சி நேற்று தொடங்கியது.

தற்போதைய அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தங்களில் உள்ள பாடப்பிரிவுகள் மற்றும் பொருத்தமற்ற உள்ளடக்கம் தொடர்பான ஏராளமான பிழைகள் மற்றும் இந்தப் பிரச்சினைகளை பொறுப்பான முறையில் தீர்க்கத் தவறியதைக் கருத்தில் கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பாராளுமன்றத்தில் உள்ள



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கையொப்பமிடும் நிகழ்வு நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முதல் கையொப்பத்தை இட்டார். (நி)


கண்ணீர் அஞ்சலி



தோற்றம்-12.07.1945
மறைவு - 06.01.2026
அமரர்
திருமதி கணபதிப்பிள்ளை சௌந்தராம்பிகை

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.க.சிவஸ்ரீ சாந்திநாயகன் அவர்களின் அன்புத்தாயாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(C-4768)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம், வண்ணார்பண்ணை.


# இலங்கை விரைகிறார் சீன அமைச்சர்

(கொழும்பு)

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி நான்கு வருடங்களுக்கு பின்னர் இலங்கைக்கு இரண்டு நாட்கள் உத்தியோகப் பூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. இதன்படி இலங்கை வரும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, முக்கிய கொள்கை அறிவிப்புகளை வெளியிடுவார் என்றும், முக்கிய பொருளாதார முயற்சிகள் குறித்து அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (நி)




கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் யாழ் மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய திரு. யோ. பிரகலாதன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். கமலமலர் யோகேஸ்வரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


(6508)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம், வடமாகாணம்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3345

### யுரேன்

ஜனவரி 2 : உலக புத்தாண்டு தீர்மானங்கள் காலாவதியாகும் நாள்...



### சகீப்



எக்சாம் கோல் கேள்வி பேப்பறில் எதையும் எழுதக் கூடாது.



அட கிறுக்கு பயபுள்ள ஆன்சர் பேப்பர் லயே என்ன எழுதுறது ன்னு தெரியல

### மிதுளன்

அவன்: நம்ம காதல மெதுவா எங்க வீட்ல சொல்லிட்டேன்...

அவள்: அவங்க என்ன சொன்னாங்க...?? ஒத்துக்கிட்டாங்களா...!!




அவன்-மெதுவா நான் சொன்னதால அவங்களுக்கு கேக்கல...

### நதீஸ்

Bro உங்க வீட்ல லவ் மேரேஜ்-க்கு ஒத்துப்பாங்களா?

எங்க வீட்ல 6 மணிக்கு மேல நகம் வெட்டுனாலே ஒத்துக்க மாட்டாங்க ப்ரோ...



### யஷ்வந்த்

மறுபடியும் மழை நல்லா வரனுன்னு வேண்டிக்கிறியே யாருண்ணே நீ?
இயற்றை ஆர்வலரா?
எதே இயற்கை ஆர்வலரா?
ரெயின் கோட் விக்கிறவன்டா நானு...



### நோயிதா

இரவு தூங்கும் போது மட்டும் மனிதனாக இருக்கிறோம் பொழுது விடிந்ததும் ஆயிரம் வேடங்கள்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முடிந்தால் என்னை கைது செய்யுங்கள்! ட்ரம்பிற்கு கொலம்பிய ஜனாதிபதி சவால்!



(பொகாட்டோ)

ட்ரம்ப், முடிந்தால் என்னை கைது செய்யுங்கள், உங்களுக்காக காத்துக் கொண்டு இருக்கிறேன் என்று கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ சவால் விடுத்துள்ளார்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவுக்குள் கடந்த வாரம் அதிரடியாக நுழைந்த அமெரிக்க சிறப்பு படையினர், அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகியோரை நள்ளிரவில் கைது செய்து அமெரிக்கா அழைத்து சென்று நியூயோர்க் சிறையில் அடைத்தனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகவும், அமெரிக்காவுக்குள் போதை பொருட்களை கடத்துவதற்கு ஆதரவாக இருந்ததாகவும் அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து அந்நாட்டின் துணை ஜனாதிபதியான டெல்சி ரோட்ரிக்ஸ் முறைப்படி இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர்களை மார்ச் 17ஆம் திகதி வரை சிறையில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதையடுத்து, அவர்கள் புரூக்ளினில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.


அமெரிக்காவின் இந்த கைது நடவடிக்கைக்கு பல்வேறு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில், கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

என்னை அழைத்துச் செல்லுங்கள், கைது செய்யுங்கள் உங்களுக்காக நான் இங்கே காத்திருக்கிறேன். ட்ரம்ப், நீங்கள் ஒரு கோழை என்று அறைகூவல் விடுத்துள்ளார். (3)



# மரினேரா

## எண்ணெய் கப்ப



ஆரம்பத்தில் 'Bella 1' என்று அழைக்கப்பட்ட இக்கப்பல், வெனிசுலா மீது அமெரிக்கா விதித்துள்ள தடையை மீறி எண்ணெய் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த மாதம் கரீபியன் கடலில் அமெரிக்கக் கடலோரக்

# 7 இலட்சம் ஆண்டுகளு அழிந்த எரிமலை உயி

(டெஹ்ரான்)

ஈரானில் சுமார் 7 இலட்சம் ஆண்டுகளாக எவ்வித அசைவுமின்றி, "அழிந்து விட்டது" எனக் கருதப்பட்டு வந்த தப்தான் எரிமலை, தற்போது மீண்டும் செயற்பாட்டுக்கு வந்துள்ளதாக செயற்கைக்கோள் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்காசிய நாடான ஈரான் மற்றும் பாகிஸ்தான் எல்லைக்கு அருகே அமைந்துள்ள இந்த எரிமலை 13,000 அடி உயரமுடையது.

ஐரோப்பிய விண்வெளி

# இந்தோனேசியாவை உலுக்கும் கனமழை

- 16 பேர் உயிரிழப்பு
- 150 பேர் மாயம்
- தேடுதல் பணிகள் தீவிரம்

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் வடக்கு சுலாவெசி மாகாணத்தில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 16 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 150 பேர் காணாமல் போயுள்ளனர்.

இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.



இந்தோனேசியாவில் கடந்த சில நாட்களாகப் பருவமழை தீவிரமடைந்துள்ளது.

இதன் காரணமாக, வடக்கு சுலாவெசி மாகாணத்தில் திங்கட்கிழமை அதிகாலை ஆறுகளின் கரைகள் உடைந்து திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

சியாவ் தகுலண்டாங் பியரோ மாவட்டத்தில் உள்ள ஏராளமான கிராமங்கள் வெள்ள நீரில் மூழ்கின.

வெள்ள நீரானது சேறு, பாறைகள் மற்றும் மர இடிபாடுகளை அடித்துக் கொண்டு வந்ததால், மக்கள் தப்பித்துச் செல்ல அவகாசமின்றி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்த இயற்கை அனர்த்தத்தில் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 150 பேரைக் காணவில்லை எனவும், அவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அப்துல் முஹாரி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர மீட்புப் படையினர், காவற்துறை மற்றும் இராணுவத்தினர் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், வீடுகளை இழந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் அண்மைக்காலமாக இயற்கைச் சீற்றங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

முன்னதாக, கடந்த டிசம்பர் மாதம் சுமத்ரா தீவில் உள்ள 52 நகரங்கள் மற்றும் மாவட்டங்களைத் தாக்கிய பேரழிவு வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 1,178 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ல்

# துரத்தும் அமெரிக்கா பாதுகாக்கும் ரஷ்யா

**(வோஷிங்டன்)**

**அமெரிக்கப் படைகளால் தீவிரமாகத் துரத்தப்படும் "மரினேரா" எனப்படும் எண்ணெய் கப்பலுக்குப் பாதுகாப்பாக ரஷ்யா தனது நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் பிற கடற்படை கப்பல்களை அனுப்பியுள்ளதான அதிர்ச்சித் தகவலை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.**

காவற்படை இதனை மறிக்க முயன்றபோது, கப்பல் பணியாளர்கள் அதில் ஏற அனுமதி மறுத்து அட்லாண்டிக் கடலை நோக்கித் தப்பினர்.

தப்பியோடும் வழியில் கப்பல் பணியாளர்கள் அதன் மேல் பகுதியில் ரஷ்யக் கொடியைப் பெயிண்ட் செய்ததுடன், கப்பலின் பெயரை "மரினேரா" என மாற்றினர்.

தற்போது இது உத்தியோகபூர்வமாக ரஷ்யாவின் சோச்சி துறைமுகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கப்பல் தற்போது ஸ்கொட்லாந்து மற்றும் ஐஸ்லாந்துக்கு இடையிலான வடக்கு அட்லாண்டிக் பகுதியில் கடும் குளிரிலும் மோசமான வானிலையிலும் பயணித்து வருகிறது.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கடந்த சனிக்கிழமை அமெரிக்க விசேட படைகளால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ட்ரம்ப் நிர்வாகம் தனது கடல்சார் முற்றுகையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அமெரிக்கா இக்கப்பலை மூழ்கடிப்பதை விட, அதைக் கைப்பற்றவே விரும்புகிறது.

இதற்காக பிரித்தானியாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களுக்கு சுமார் 10 போக்குவரத்து விமானங்கள் மற்றும் சிறப்பு உலங்கு வானூர்திகள் வந்து சேர்ந்துள்ளன. கப்பலின் பெயர் மாறினாலும், அதன் தனித்துவமான அடையாள எண் மாறாததால், சர்வதேச சட்டப்படி அதைக் கைப்பற்ற தமக்கு அதிகாரம் இருப்பதாக அமெரிக்கா வாதிடுகிறது.

சர்வதேச கடற்பரப்பில் ரஷ்யக் கொடியுடன் பயணிக்கும் கப்பலுக்கு அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் தேவையற்ற நெருக்கடியைக் கொடுப்பதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சு சாடியுள்ளது.


"கடல் வழிப் பயணச் சுதந்திரம்" பற்றிப் பேசும் நாடுகள், அதனைத் தாமும் கடைப்பிடிக்க வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

இந்த விவகாரம், உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவர ஜனாதிபதி ட்ரம்ப் எடுத்து வரும் இராஜதந்திர முயற்சிகளுக்குப் பெரும் சவாலாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஒருபுறம் சமாதானப் பேச்சுக்கள் நடக்கையில், மறுபுறம் நடுக்கடலில் இரு நாட்டுப் படைகளும் நேருக்கு நேர் மோதும் சூழல் உருவாகியுள்ளது. (3)

## நக்குப் பிறகு பிர்பெற்றது!

நிறுவனத்தின் "சென்டினல்-1" செயற்கைக்கோள் எடுத்த படங்களை ஆய்வு செய்தபோது, கடந்த 2023 ஜூலை முதல் 2024 மே வரையிலான 10 மாதங்களில் எரிமலையின் உச்சிப் பகுதி 9 சென்ரி மீற்றர் உயர்ந்துள்ளது என்று தெரியவந்துள்ளது.



இந்த எரிமலையின் உட்பகுதியில் ஆழமான இடத்தில் அதிகபடியான வெப்பம் கொண்ட திரவங்கள் மற்றும் வாயுக்கள் குவிந்து வருவதாலேயே, எரிமலையின் தரைப்பகுதி மேல்நோக்கி உயர்ந்துள்ளது என விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர்.

இது அந்த எரிமலை மீண்டும் செயற்பாட்டுக்குத் தயாராவதற்கான அறிகுறியாகக் கருதப்படுகிறது.

கடந்த 7 இலட்சம் ஆண்டுகளாக எந்தவித எரிமலைக் குழம்பு கசிவோ அல்லது அசைவோ இல்லாததால், இதுவரை "அழிந்த எரிமலை" என்று வகைப் படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், தற்போதைய மாற்றங்களை அடுத்து, இது "உறங்கும் எரிமலை" என விஞ்ஞானிகளால் அதிகாரபூர்வமாக மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திடீர் மாற்றம் அப்பகுதி நிலப்பரப்பில் புவியியல் ரீதியாக பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என்பதால், விஞ்ஞானிகள் இந்த எரிமலையைத் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணித்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)

## எத்தியோப்பியாவில் சோகம்

# லொறி விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழப்பு!

(அபார்)

எத்தியோப்பியாவில் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

எத்தியோப்பியாவின் வடகிழக்கு அபார் பகுதியில் செமரோ நகரில் 100இற்கும் மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் பெரிய லொறி ஒன்றில் சென்று கொண்டு இருந்தனர்.

அப்போது அவர்கள் சென்று கொண்டிருந்த லொறி எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் லொறியில் இருந்தவர்களில் 22பேர் உயிரிழந்தனர்.

65 இற்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்று உள்ளூர் பொலிஸார், சடலங்களை மீட்டனர்.


காயம் அடைந்தவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.


இவர்கள் பயணித்த லொறி எங்கு இருந்தது எங்கே பயணித்தது என்பது பற்றிய விபரங்களை பொலிஸார் சேகரித்து வருகின்றனர்.

ஆனால் அவர்கள் சென்ற லொறியின் பாதையானது, எத்தியோப்பியாவில் இருந்து ஜிபோட்டி வழியாகவும், செங்கடலைக் கடந்து ஏமன், சவூதி அரேபியா மற்றும் பிற மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதாகும்.

வேலை தேடி வளைகுடா நாடுகளுக்கு பயணிக்கச் செல்லும் புலம்பெயர்ந்தோர்களுக்கு ஏமன் ஒரு முக்கிய பாதை.

எனவே, லொறியில் பயணித்தவர்கள் வேலை தேடி சென்றவர்களாக இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (3)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் அறுவடை ஆரம்பம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2025 / 2026 காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், தற்போது அக்கராஜன்குளம், பெரியகுளம் போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் நெல் அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-316)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1984 - இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா- 44
7இல்செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: HNDA, MBA, CIMA, Accountant (pvt)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/7184

பிறப்பு: 1986 - இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா-33 3/4
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Dip in Civil Engineering,Land officer(Gov)
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/7838

பிறப்பு:1993 – RC
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BBM,Executive Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16238

பிறப்பு :1992 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: சிற்பவேலை
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16240

பிறப்பு:1993 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
4ல்சூரிசெவ்
கி.பா: 18 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில் - A/L, France
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: B/16241

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995 - இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSc, MSc, Chemist
எதிர்பார்ப்பு: Engineer, Lecturer
தொ.இ: G/16239

பிறப்பு -1996- இந்து
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - BSc, Junior Executive Officer (pvt)
எதிர்பார்ப்பு - Doctor, Engineer, Lecturer
தொ.இ: G/13874

பிறப்பு - 1991 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கிபா- 32
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, MPhil, Reseacher
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/13552

பிறப்பு -1991 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்: 5'6"
கி-பா-51 3/4
தகைமை/தொழில்- BCom, Executive (pvt)
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/16253

பிறப்பு-2002 - இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
7இல்சூரிசெவ்
கி.பா-36
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Dip in English
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/16257

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 515

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# நான்கு பிள்ளைகள்!

ஆன்மிகப் பேச்சாளர் ஒருவர் எனக்குச் சம்பந்தமில்லாத ஒரு கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்டார். அது என்ன கேள்வி என்றால்.

"தசரதனுக்கு ஏன் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள்?" என்று கேட்டார்.

"எனக்கு என்ன தெரியும். இது தசரதனைப் பார்த்து நீங்கள் கேட்க வேண்டிய கேள்வி!" என்றேன்.

"தசரதன் கேட்டது ஒரு பிள்ளை தான்" என்றார்.

"அப்படியா?" என்றேன்.

"ஆமாம்!" என்றார். தனக்குப் பின்னாடி நாட்டை ஆளவும். தான் நல்ல கதி அடைய உதவவும் தசரதன் கேட்டது ஒரு பிள்ளைதான். அதே மாதிரி தேவர்கள் கேட்டதும் இராவண வதம் செய்ய ஒரு இராமன்தான்.

அப்படி இருக்கும் போது எதற்கு நான்கு பிள்ளைகள்? இதற்கு அவர் என்ன விளக்கம் கொடுக்கிறார்.

இந்த உலகத்திலே நான்கு வகையான தர்மங்கள் உண்டு. நான்கு வகையான தர்மங்களையும் மக்களுக்கு காட்டுவதற்காகத்தான் அங்கு தோன்றினார்களே தவிர இராவணனை வதம் செய்வதற்காக அல்ல" என்றார் அவர்.

இது என்ன நான்கு வகையான தர்மம்.

முதலிலே வருவது சாமானிய தர்மம்.அதாவது பிள்ளைகள் பெற்றோர்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும்.

சீடன் குருவிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், மனைவி கணவனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் இவை தான் சாமானிய தர்மங்கள்!

இதை அனுசரித்து நடந்து காட்டியவன் இராமன்!

சாமானிய தர்மங்களை ஒழுங்காக செய்துகொண்டு வந்தாலே ஒரு நிலை வருமாம். அந்த நிலையிலே இறைவன் அடி ஒன்றே நிரந்தரம். மற்ற எதுவும் ஒன்றும் இல்லை என்ற நினைப்பு வருமாம்.

அதனாலேதான் குலசேகர ஆழ்வார் சொன்னார்.

"இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெரினும் வேண்டேன்!" என்று கிருஷ்ண லீலா தரங்கிணி ஆசிரியர் "தாமரைகளைப் போன்ற உன் பாதங்களைச் சுற்றி நான் தேன் வண்டு போல் வந்து கொண்டிருக்க வேண்டும்" என்றாராம்.

இத்தகைய தர்மத்துக்கு "சேஷ தர்மம்" என்று பெயர். இதைத்தான் அனுசரித்துக் காட்டினான் இலக்குவன்.

சரி மூன்றாவது "விசேட தர்மம்" அதாவது தூரத்திலே இருந்துகொண்டே எப்பொழுதும் இறைவன் ஞாபகமாகவே இருக்கிறது!

சேஷ தர்மத்தை விட விசேட தர்மம் கடினம். பகவானுக்குப் பக்கத்திலேயே இருந்துவிட்டு அவன் ஞாபகமாக இருக்கிறது கஷ்டமில்லை.

ஆனால் தூரத்திலே இருந்துக்கொண்டு அவனையே நினைக்கிறது கடினம் அதைச் செய்து காட்டியவன் பரதன்!

நான்காவது தர்மம் என்னவென்றால் விசேடதர தர்மம்

இறைவனை விட அவனுடைய அடியார்களுக்குத் தொண்டு செய்வது இந்த தர்மம்.

இதைக் கடைப்பிடித்துக் காட்டியவன் சத்ருக்கனன் அதனாலேதான் பரதனை விடாமல் பின்பற்றி அவனுக்குத் தொண்டுகள் செய்தான்.

இப்படி நான்கு வகையான தர்மங்களையும் கடைப்பிடித்து மக்களுக்குக் காட்டுவதற்காகத்தான் இறைவன் நான்கு அவதாரங்களாக தோன்றினார்கள் என்று விளக்கம் கொடுத்தார் அந்த ஆன்மிகப் பேச்சாளர்.

என்னதான் நான்கு வகையான தர்மங்களை அனுசரித்துக் காட்டினாலும் இன்றைக்கு மக்கள் எந்த அளவுக்கு அதுமாதிரி நடந்துகொள்கிறார்கள்? ஒரு இராமாயண சொற்பொழிவாளர் பேசுவதற்காகப் புறப்பட்டார்.

"எங்கே புறப்பட்டீர்கள்?" என்று கேட்டார் வீட்டுக்கார அம்மா!

"இராமாயண சொற்பொழிவு நடத்தப் போகிறேன். நீயும் கூட வா" என்று கூப்பிட்டார் இவர்.

"நான் வரவில்லை. நீங்கள் போய் வாருங்கள்!" என்றார்.

"என்ன இது இப்படி சொல்கிறாய்? அன்றைக்கு இராமன் காட்டுக்குப் போகிறேன் என்று சொன்னதும் சீதை உடனே நானும் வருவேன் என்று புறப்படவில்லையா?" என்றார்.

"சீதை ஒன்றும் விபரம் இல்லாமல் புறப்படவில்லை. வீட்டிலே வயதான மாமனார், மாமியார்கள், மைத்துனர்கள் இவர்களுக்கு எல்லாம் சமைத்துப் போட்டு காப்பாற்ற வேண்டியிருக்கும். இதைவிட காட்டுக்குப் போய்விடுவது நல்லது என்று நினைத்ததிலே ஒன்றும் தவறில்லை!" என்றார் அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

(கரணவாய்)

புலோலி சாவகச்சேரி வீதி துன்னாலை மத்தி, அல்லையம்பதி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் சென்ற மோட்டார் சைக்கிளை மந்திகைச் சந்தியில் இருந்து துன்னாலை கலிகைச் சந்திப் பக்கமாக துரத்திச் சென்ற பருத்தித்துறை பொலிஸ் போக்குவரத்து பொறுப்பதிகாரியின் மோட்டார் சைக்கிள் எதிர்த்திசையில் துவிச்சக்கரவண்டியில் வந்த நபரை மோதியுள்ளது.

இந்நிலையில் அல்லையம்பதி துன்னாலையைச் சேர்ந்த சுப்ரமணியம் உதயகுமார் (வயது-64) என்பவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அவரச சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பொலிஸாரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸ்ார் மேற்கொண்டு வருகின்றனர். (8-60)

## SLIC ஆயுள் மற்றும் SLIC ஜெனரல் காப்புறுதி 2026 ஆம் ஆண்டிற்கான வணிக நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தது





இலங்கை காப்பீட்டு ஆயுள் (SLICLL) மற்றும் இலங்கை காப்பீட்டு ஜெனரல் (SLICGL) ஆகியவை ஜனவரி 1 ஆம் திகதி இலங்கை காப்பீட்டு தலைமை அலுவலகத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான வணிக நடவடிக்கைகளைத் தொடங்கின. SLICLL மற்றும் SLICGL இன் தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழு, நிறுவன மேலாண்மை குழு மற்றும் SLICLL மற்றும் SLICGL இன் ஊழியர்கள் இந்த நிகழ்வை சிறப்பித்தனர். அத்தோடு நாடளாவிய கிளை அணிகள் தலைமை அலுவலகத்தின் நேரடி ஒளிபரப்பு மூலம் அலுவலக நடவடிக்கைகளில் மத நம்பிக்கைகளுடனும் ஆசீர்வாதங்களுடன் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை காப்பீட்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி நலின் சுபசிங்க, "2025 ஆம் ஆண்டு இலங்கை காப்பீட்டு நிறுவனத்திற்கு ஒரு விதிவிலக்கான ஆண்டாக அமைந்தது, இந்த வணிகம் அனைத்து துறைகளிலும் மிகப்பெரிய வளர்ச்சியையும் புதுப்பிக்கப்பட்ட வலிமையையும் வெளிப்படுத்தியுள்ளது. இந்த செயல்திறன் நாடு முழுவதும் உள்ள எங்கள் குழுக்களின் ஆர்வம், ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. 2026 ஆம் ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்கும் போது, எங்கள் கவனம் "வாடிக்கையாளர் மையத்தில்" உறுதியாக உள்ளது என்றார்.

வணிகத் தொடக்க விழாவில் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட இலங்கை காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் நுசித் குமாரதுங்க, "பெருமைமிக்க பாரம்பரியம் கொண்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக, இலங்கை காப்பீட்டு ஆயுள் மற்றும் இலங்கை காப்பீட்டு ஜெனரல் ஆகியவை நேர்மை, வலுவான நிர்வாகம் மற்றும் நெறிமுறை வணிக நடைமுறைகளுடன் செயல்படுவதில் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளன. எங்கள் பொறுப்பு நிதி செயல்திறனுக்கு அப்பாற்பட்டது. தேசிய பொருளாதார நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதிலும், பொது நம்பிக்கையை வலுப்படுத்துவதிலும், நாடு முழுவதும் உள்ள சமூகங்களின் நல்வாழ்வுக்கு பங்களிப் பதிலும் நாங்கள் முக்கிய பங்கு வகிக்கிறோம்" என்று கூறினார்.

## வடக்கில் கால் பதிக்கும் நோலிமிட் 28 ஆவது காட்சியறையை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்தது




இலங்கையில் நவநாகரிக ஆடையணி விற்பனையில் முன்னிலை வகித்து வருகின்ற நாமமான நோலிமிட், தனது 28 ஆவது காட்சியறையை, யாழ் நகரின் மையத்தில் திறந்தது. வடக்கின் தனித்துவமான அடையாளமாகவும், ஆழமாக வேரூன்றியுள்ள மரபுகளையும் கொண்டுள்ள சிறப்பு மிக்க ஒரு நகரமாகத் திகழ்ந்து வரும் யாழ்ப்பாணத்தில் தற்போது காலடியெடுத்து வைத்துள்ளது.

தனித்துவமான சந்தை வாய்ப்புக்கள், பாரம்பரியச் சிறப்பு மிக்க உணவு வகை, கலை மற்றும் கலாச்சார விழுமியங்கள், கைவினை உற்பத்திப் பொருட்கள், மற்றும் ஓயாத உழைப்பின் உத்வேகம் என இலங்கையில் கலாச்சார ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்ற நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இந்த தனித்துவமான பண்புகள் அனைத்தையும் ஒருங்கே பிரதிபலிக்கச் செய்யும் வகையில் யாழ்ப்பாணத்தில் நோலிமிட்டின் புத்தம்புதிய காட்சியறை வடிவமைக்கப்பட்டுள்ளது. நகரத்தின் நவீன அபிலாஷைகளை பிரதிபலிக்கும் அதேசமயம், முழுக் குடும்பத்திற்கும் ஏற்ற சிறந்த கொள்வனவு அனுபவத்தை வழங்குகின்றது.

யாழ் நகரின் பிரதான வர்த்தக மையத்தில் இந்த காட்சியறை அமைந்துள்ளதுடன், ஆண்களுக்கான ஆடையணிகள், பெண்களுக்கான ஆடையணிகள், மற்றும் சிறுவர்களுக்கான ஆடையணிகள் என பலதரப்பட்ட ஆடையணிகள், பாதணிகள் மற்றும் அணிகலன்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பிரயாண பாவனைப் பொருட்கள் மற்றும் பிரயாணப் பொதிகள், மற்றும் அழகுசாதனப் பொருட்கள் உள்ளிட்ட பரந்த வகை தெரிவுகளை வழங்கி, வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் கொள்வனவு செய்யும் மகத்தான அனுபவத்தை ஏற்படுத்துகின்றது.

நோலிமிட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹபீஸ் முபாரக் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்:

"கலாச்சாரம், தொழில் முயற்சி, மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்கள் என வளம் நிறைந்த யாழ்ப்பாணம், இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் மிக முக்கியமான வளர்ச்சி கொண்ட மையமாக இந்த நகரத்தை நாம் கருதுகின்றோம்.

இந்நகரத்தில் வளர்ச்சி கண்டு வருகின்ற அபிலாஷைகளுக்கு ஏற்ற வகையில், நவீன, உலகத்தரம் வாய்ந்த வர்த்தக அனுபவத்தை வழங்கி, எமது 28 ஆவது காட்சியறையின் மூலமாக யாழ்ப்பாணத்தின் எதிர்கால நலன் மீது முதலீடு செய்வதையிட்டு நாம் பெருமை கொள்வதுடன், இப்பிராந்தியத்திலுள்ள குடும்பங்களுக்கு தரமான, நவீன நவநாகரிக தயாரிப்புக்களை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றோம் "எனத் தெரிவித்தார்.

# இராசிபலன்

08.01.2026
மார்கழி 24 , வியாழக்கிழமை
பஞ்சமி முற்பகல் 11.25 மணிவரை
பூரம் பிற்பகல் 5.04 மணிவரை

சுபநேரம் 8.02-9.32 மணிவரை
இராகுகாலம் 2.02-3.32 மணிவரை

சந்திராஷ்டமம்- திருவோணம், அவிட்டம்.

வளவன்

**மேஷம்**
வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்**
நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சுகங்களும் சந்தோசங்களும் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்**
இல்லம்தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, விரதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்**
குடும்ப பொறுப்புக்கள் கூடும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி**
தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**துலாம்**
திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**தனுசு**
வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்ற முண்டு.

**மகரம்**
உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பிரயாண பயமுண்டு, வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், விட்டுச் சென்ற உறவுகள் மீண்டும் வந்து சேரலாம்.

**மீனம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

சுலபமாக கிடைத்த பொருளுக்கு சரியான மதிப்பு இருக்காது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 949





"தாங்கள் இல்லாத சமயத்தில் இவர்கள் இங்கே என்ன சதி செய்கிறார்கள் என்பதைக் கவனித்து கொள்வேன். ஏதேனும் இவர்கள் சூழ்ச்சி செய்தால் அது பலிக்காமற் செய்ய வழி தேடுவேன்."

"நந்தினி! இதிலேயெல்லாம் நீ எதற்காகப் பிரவேசிக்க வேண்டும்?"

"கணவர் சிரத்தை கொண்டுள்ள காரியத்தில் மனைவிக்கும் சிரத்தை இருக்க வேண்டாமா? 'வாழ்க்கைத் துணைவி' என்று பிறகு எதற்காக எங்களைச் சொல்கிறது?"

"என்ன இருந்தாலும் இந்த மூர்க்கர்களுக்ும் நீசர்களுக்கும் நடுவில் உன்னைத் துணையின்றி விட்டுவிட்டு நான் போகிறதா? அது எனக்குச் சிறிதுமே சம்மதமாயில்லையே!"

"எனக்கு இங்கே துணையில்லாமற் போகவில்லை. மணிமேகலை இருக்கிறாள் எனக்காக அந்தப் பெண் என்ன வேண்டுமானாலும் செய்வாள்"

"அது உண்மைதான் நானும் கவனித்தேன். உன்னுடைய மோகன சக்தி அவளை உன் அடிமையாக்கி இருக்கிறது. ஆனாலும் அது எவ்வளவு தூரம் நிலைத்திருக்கும்? ஆதித்த கரிகாலன் சிங்காதனத்தில் ஏறி அந்தப் பெண்ணை சக்கரவர்த்தினியாக்கிக் கொள்ளப் போவதாக ஆசை காட்டினால்"

"ஐயா! அது விடயத்தில் தங்களுக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டியதில்லை. மணிமேகலை என் கருத்துக்கு மாறாகத் தேவலோகத்து இந்திராணி பதவியையும் ஏற்றுக்கொள்ள மாட்டாள். 'கரிகாலனை இந்தக் கத்தியால் குத்திக் கொன்று விட்டு வா!' என்று நான் சொன்னால், உடனே அவ்விதம் செய்து விட்டு வருவாள். என்னுடைய மோகன சக்தியைப் பற்றி அடிக்கடி தாங்களே சொல் வீர்கள் அல்லவா? அது மணி மேகலையை முழுதும் ஆட்கொண்டிருக்கிறது! வேணுமானால், இப்போதே தங்களுக்கு அதை நிரூபித்துக் காட்டுகிறேன்!" என்றாள் நந்தினி. பழுவேட்டரையரின் உடம்பு படபடத்தது. அந்தக் கிழவர் உதடுகள் துடிக்க, தொண்டை அடைக்க, நாத்த முதழுக்கக் கூறினார்: "தேவி! உன்னுடைய சக்தியை நான் அறிவேன். ஆனால் கரிகாலன் விடயத்தில் நீ அது மாதிரி எதுவும் பரீட்சை பார்க்க வேண்டாம். அவன் அறியாச் சிறுவன். ஏதோ தெரியாமல் உளறினான் என்பதை நாம் பெரிது படுத்தக் கூடாது. கரிகாலன் மணி மேகலையை மணந்து கொள்ள இஷ்டப்பட்டால் நாம் அதற்குத் தடையாக இருக்க வேண்டாம்!"

"ஐயா! நாம் தடை செய்யாமலிருக்கலாம். ஆனால் விதி ஒன்று இருக்கிறதே! அதை யார் தடை செய்ய முடியும்? மணிமேகலை என்னிடம் பிரியங் கொண்டவளாயிருப்பது போல் நானும் அவளிடம் பாசம் வைத்திருக்கிறேன். என் கூடப் பிறந்த தங்கையைப் போல் அவளிடம் ஆசை கொண்டிருக்கிறேன். அற்பாயுளில் சாகப் போகிறவனுக்கு அவளை மணம் செய்து கொடுக்க நான் எப்படி இணங்குவேன்?" என்றாள் நந்தினி. அப்போது அவளுடைய பார்வை எங்கேயோ தூரத்தில் நடக்கும் எதையோ பார்த்துக் கொண்டிருப்பது போல தோன்றியது.

தொடரும்...



## சிறுவர் அரங்கம்

## உழைப்பே உயர்வு தரும்



(நேற்றைய தொடர்ச்சி)

அந்த நாடு மிகவும் அழகாக இருந்தது. வானுயர்ந்த மரங்கள் செழிப்பாக ஓங்கி வளர்ந்திருந்தன. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று காட்சியளித்தது. ஒரு அடி நிலம் கூட வீணாகாமல் பயிர்கள், பயன்தரும் மரங்கள் வரிசையாக நாட்டப்பட்டிருந்தன.

அங்குள்ள மக்கள் மிகவும் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டு அமைச்சர் குழாமினர் சென்றார்கள். அந்த நாட்டு அமைச்சர் அவர்களை வரவேற்று அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். ஆடம்பரமான வரவேற்பு இல்லை. சென்ற அமைச்சருக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் உள்ளே சென்றார்.

அவர்களுக்கு உணவுகள் பரிமாறப்பட்டன. அதுவும் ஆடம்பரமான உணவு வகைகள் இல்லை. எளிமையான சுவையான உணவுகள். போன அமைச்சர் முடிவு செய்து விட்டார்: இந்த நாட்டு மன்னன் மகா கஞ்சன், உண்ணும் உணவிலே இப்படி கஞ்சத்தனம் செய்கின்றானே. மக்களை என்ன பாடுபடுத்துவான் என்று நினைத்தார். "சரி உங்கள் நாட்டு நடப்புகள் எல்லாம் எப்படிப் போகிறது" என்று கேட்டார் அந்த நாட்டு அமைச்சர். சொல்வதற்கு பெரிதாக ஒன்றுமில்லை என்றார்.

"அப்படியா" என்று கேட்ட அமைச்சர், தன்னுடைய மன்னனின் பெருமைகளை வானுயர புகழ்ந்து கொண்டே போனான். கடைசியில் ஒவ்வொரு நாளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு தான தர்மங்கள் வழங்குவதை கூறி முடித்தான். அந்த நாட்டு அமைச்சரும் "அப்படியா...? அப்படியா...? என்று தலையை ஆட்டியபடி கேட்டுக் கொண்டே இருந்தார்.

அந்த நாட்டிற்கு சென்ற அமைச்சருக்கு ஒரு மாதிரியாக இருந்தது. "என்ன இந்த அமைச்சர் தன்னுடைய அரசனைப் பற்றி ஒன்றும் சொல்கிறானில்லையே, ஏண்டா இந்த நாட்டிற்கு வந்தோம் என்று நினைத்தார். இருந்தாலும் தன்னை சமாளித்துக்கொண்டு கேட்டார். "ஏன் உங்கள் மன்னன் இப்படி தான, தர்மங்கள் ஒன்றும் செய்வதில்லையா" அதற்கு அந்த நாட்டு அமைச்சர் சொன்னார். "இல்லை எங்கள் நாட்டு மன்னன் இப்படித் தான தர்மங்கள் செய்வதில்லை".

"ஏன் உங்கள் மன்னன் இவ்வளவு கஞ்சனாக இருக்கின்றார். ஏழைகளுக்கு தான, தர்மங்கள் செய்வதால் தானே புண்ணியம் கிடைக்கும் சொர்க்க லோகத்தில் இடம் கிடைக்கும் என்றார்.

இதைக் கேட்டதும் அந்த நாட்டு அமைச்சர் சொன்னார். "எங்கள் மன்னன் தன்னுடைய மக்கள் யாரையும் கைநீட்டி பிச்சை எடுக்கும் நிலையில் வைத்திருக்கவில்லை. இங்கு உள்ளவர்கள் எல்லோருக்கும் எல்லாமே இருக்கின்றது. மக்களுடைய உழைப்பும் உழைப்புக்கேற்ற ஊதியமும் அவர்களிடமே கொடுக்கப்படுகின்றது. அதனால் அவர்கள் யாரிடமும் கைநீட்டி பிச்சை எடுக்க வேண்டிய தேவை இல்லை" என்றார். இதைக் கேட்ட அந்த அமைச்சர் அதிர்ச்சியடைந்து போனார். அவருக்கு இப்போது தன்னுடைய நாட்டிற்கு போகவே மனமில்லாமல் இருந்தது. இதிலிருந்து என்ன விளங்குகின்றது பிள்ளைகளே!

உழைத்தால் சிறப்பாக வாழலாம். கைநீட்டி பிச்சை எடுக்க வேண்டிய நிலை வராது. (முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லது செய்வது அற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின். – புறநானூறு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியலில் தமிழினம் அநாதையாகிவிட்டது

எங்கள் ஈழத் தமிழினத்தின் அவலத்தை நினைக்கும்போது கட்டாந்தரையில் நின்று ஓ! என்று கதறி அழவேண்டும் போல் உள்ளது.

உண்மை. ஒரு பெரும் விடுதலைப் போராட்டத்தை நடத்திய எம் இனம் இன்று அரசியலில் அநாதையாகி நிற்கிறது.

ஈழத் தமிழினம் இருக்கும் வரை இந்த உலகில் தமிழ் வாழும் என்று எங்கள் தமிழகத்து அறிஞர்கள் கூறிய வார்த்தை கேட்டு தோட்புயங்கள் உயர்ந்த அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கிறோம். இன்று எல்லாம் இழந்து மயான காண்டத்து அரிச்சந்திரன் போல நம் இனம் நிற்கிறது.

இவ்வாறான மிக மோசமான நிலைக்கு இலங்கை அரசுகளோ அன்றி சிங்களப் பேரின வாதிகளோ காரணமன்று.

மாறாக, நம் இனத்தின் வீழ்ச்சிக்கு நாமே காரணம் என்பதுதான் உண்மை.

என்ன செய்வது புலம்பெயர் நாடுகளில் உள்ள நம் உறவுகள் சமூக வலைத்தளங்களில் செய்கின்ற கடும் விமர்சனங்கள் எல்லை தாண்டிவிட்டன.

கூடவே தாயகத்தில் வாழ்கின்ற தமிழ்ப் பற்றாளர்களும் நேர்மையாளர்களும் புத்திஜீவிகளும் இங்கு வந்து பிறந்துவிட்டோம் வாழத்தெரியவில்லை என்ற கவிவரிக்கு நாமல்லோ உரியவர்கள் என்ற ஏக்கத்தோடு அமைதியாகிவிட்டனர்.

இவ்வாறு அவர்கள் அமைதியாகுவதற்கு எங்கள் சமூகவலைத்தளங்கள் எவர் முகத்திலும் கரிபூசக் காத்திருப்பதே காரணமெனலாம்.

கூடவே சுயநல அரசியல் சன்னதம் கொண்டுவிட்டது. ஆகையால் இனி நம் தமிழ் இனத்தில் அரசியல் என்பது ஆகாத காரியம் என்ற முடிவுக்கு தமிழ்ப் பற்றாளர்களும் புத்திஜீவிகளும் வந்துவிட்டனர்.

ஏலவே எஞ்சியிருக்கின்ற அரசியல்வாதிகள் மீதும் கடும் குற்றச்சாட்டுக்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அலங்காரம் செய்கின்ற நபர்கள்.

இந்நிலையில் எஞ்சியிருக்கின்ற சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதிகளும் களத்தில் இருந்து வெளியேறுகின்ற கட்டத்துக்கு ஆளாக்கப்பட்டு விட்டனர்.

ஆக, இனி எங்கள் தமிழ் அரசியலில் எஞ்சப் போவது வில்லன் தரப்புகள் மட்டுமே.

அன்புக்குரிய தமிழ் மக்களே! பிரசாரங்களை அப்படியே நம்புவதும் கற்பனைகளை உள்ளவாறு நிஜமாக்குவதும் போலித்தனங்களை உண்மையின் தத்ரூபம் எனக் கருதுவதுமான எங்களின் பலயீனம் எங்கள் இனத்தைக் கந்தறுத்துக் காவடி ஆட வைத்து விட்டது.

உண்மை. எந்த ஆய்வும் ஆதாரமும் இல்லாமல், யார் எதைச் சொன்னாலும் அப்படியே நம்புகின்ற தமிழ் மக்களின் பலயீனத்தை சமூக வலைத்தளங்கள் தக்கமுறையில் பயன்படுத்த; நாமே நமக்கு ஈனத்தைக் தேடி வெறுவிலியாக நிற்கின்றோம். யாரொடு நோவோம்.

### கேப்பாப்புலவு காணி விடுவிப்பு விவகாரம்

## ஜனாதிபதியிடம் பூசி மழுப்பிய இராணுவம்
## ஆதாரத்துடன் அம்பலப்படுத்திய ரவிகரன் எம்.பி

முல்லைத்தீவு - கேப்பாப்புலவுப் பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு விட்டதாக இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதியிடம் வழங்கிய தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று (07) ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே ரவிகரன் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கேப்பாப்புலவு காணி விடுவிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டபோது அங்குள்ள மக்களின் காணிகள் பெரும்பாலானவை விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் விடுவிக்க முடியாத காணிகளுக்குப் பதிலாக மாற்று நிலமும் வீடுகளும் வழங்கப்பட்டுவிட்டதாகவும் இராணுவ உயரதிகாரிகள் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர்.

இதன்போது குறுக்கீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அதிகாரிகள் ஜனாதிபதிக்குத் தவறான தரவுகளை வழங்குகின்றனர் எனச் சாடினார். அவர் மேலும் தெரிவிக்கையில், கேப்பாப்புலவில் இன்னும் 55 பேருக்குச் சொந்தமான 59.5 ஏக்கர் காணிகளும் 4 பேருக்குச் சொந்தமான 100 ஏக்கர் மத்திய வகுப்புக் காணிகளும் என மொத்தம் 159.5 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இதனை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், மக்களுக்குப் பதிலீட்டுக் காணிகள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுவதையும் அவர் மறுத்தார்.

மக்களுக்குச் சொந்தக் காணிகள் வழங்கப்படவில்லை. சீனியாமோட்டைப் பகுதியில் மிகச்சிறிய துண்டுக் காணிகளில் தற்காலிகமாக வீடுகள் அமைக்கப்பட்டு அங்கு மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் சொந்த நிலம் விடுவிக்கப்படும் என்ற அதிகாரிகளின் வாக்குறுதியை நம்பியே மக்கள் அங்கு தற்காலிகமாகக் குடியிருக்கின்றனர்.

ஆனால், அவர்களின் பூர்வீக நிலங்கள் இன்னும் ஆக்கிரமிப்பிலேயே உள்ளன எனத் தெளிவுபடுத்தினார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, கேப்பாப்புலவு காணி விடுவிப்புத் தொடர்பான உண்மைநிலை குறித்து விரிவான அறிக்கை ஒன்றைத் தமக்கு சமர்ப்பிக்குமாறு இராணுவத் தளபதிக்குப் பணிப்புரை விடுத்தார். (ம-7)

### சீரற்ற காலநிலையால்

## நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை இரத்து ● ● ●

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற கால நிலை மற்றும் வளிமண்டலத் திணைக்களத்தின் அபாய எச்சரிக்கையைத் தொடர்ந்து, நயினாதீவு மற்றும் குறிகாட்டுவான் இடையிலான தனியார் படகுச் சேவைகள் இன்று (08) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்பாக காணப்படக்கூடும் என்பதால் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, பயணிகள் தமது பயணங்களை இதற்கு ஏற்றவாறு திட்டமிட்டுக் கொள்ளுமாறும் நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-7,33)

## அரசின் பொருளாதார அணுகுமுறையில் சிக்கல்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு எடுத்த அணுகுமுறையில் பாரதூரமான பிரச்சினைகள் காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் சுட்டிக் காட்டினார்.

தேர்தல் காலத்தில் கடன் நிலைத்தன்மை இணக்கப்பாடு மற்றும் சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகளைத் திருத்தியமைப்பதற்குத் தற்போதைய ஆளும் தரப்பினர் வாக்குறுதிகள் பலவற்றை வழங்கியிருந்தனர்.

ஆனால், இந்த அரசாங்கமும் உள்ளவற்றை உள்ளவாறே தொடர்ந்தும் கடைபிடிக்கின்றது. இதன் காரணமாக சாதாரண குடிமக்கள் மீது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. கொள்கை வகுப்பாளர்கள் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## கிரவல் மண்ணுடன் வந்த வெடிபொருள்

### கிளிநொச்சியில் பரபரப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதிப் புனரமைப்புப் பணிக்காக கொண்டு வரப்பட்ட கிரவல் மண்ணுக்குள் வெடிபொருள் ஒன்று கண்டெடுக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டு வை.எம்.சீ.ஏ. வீதியைப் புனரமைக்கும் பணிகளை கரைச்சி பிரதேச சபை தற்போது முன்னெடுத்து வருகின்றது. இதற்காக வீதியில் கொட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கிரவல் மண் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட மண்ணைப் பரப்பும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போதே மண்ணுக்குள் வெடிபொருள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட வெடிபொருள் எவ்வகையைச் சார்ந்தது என்பது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸாரும் பாதுகாப்புப் பிரிவினரும் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## யாழ். வணிகர் கழகத்தின் ஒருநாள் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்டத்தில் இயங்கும் இரத்தினக்கல் விற்பனையாளர்கள், நகைக்கடைகள் மற்றும் தனிநபர்களுக்கான இரத்தினக்கல் விற்பனையாளர் உரிமம் மற்றும் தங்க ஆபரண பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஒரு நாள் நடமாடும் சேவையானது யாழ். வணிகர் கழகத்தினால் எதிர்வரும் 22.01.2026 வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே இந்த நடமாடும் சேவையில் தங்கநகை செய்வோரும் தங்கநகை மற்றும் இரத்தினக்கற்கள் விற்பனையாளர்களும் பங்குபற்றி தங்கள் பதிவுகளை மேற்கொண்டு பயனடையுமாறு யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026

## வாழ்க்கை சிறப்பாக இருக்கும்!



**உழைக்கும் ஆர்வம் மிகுந்த மகர இராசியினரே! உழைப்பினால் காரியம் சாதிக்கும் மகர இராசியினருக்கு 2026ஆம் ஆண்டு. ஆங்கில புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.**

இதுவரை நடக்காமல் இருந்த நல்ல விடயங்கள் நடக்கும். பணி புரியும் துறையில் சாதனை செய்து புகழ் அடைவீர்கள். உடலிலும் மனதிலும் புதிய தெம்பு பிறக்கும். வசீகரமான தோற்றம் ஏற்படும். எதையும் எதிர்கொள்ளும் தைரியமும் பலமும் உண்டாகும். அனைவரும் வியக்கும் வகையில் வாழ்க்கை வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கடந்த காலங்களில் பட்ட கஷ்டத்திற்கு தற்போது பலன் கிடைக்கும்.

**குருவின் சஞ்சார பலன்கள்**

மகர இராசிக்கு 3,12ஆம் அதிபதியான குரு பகவான் ஆண்டின் தொடக்கத்தில் மே மாதம் வரை குரு பகவான் ருண, ரோக சத்ரு ஸ்தானத்தில் சஞ்சரிப்பார். ஜூன் மாதம் முதல் சம சப்தம ஸ்தானத்தில் உச்சமடைந்து இராசியை பார்ப்பார். ஆன்ம பலம் பெருகி சுறுசுறுப்பாக தைரியத்துடன் இருப்பார்கள். குடும்ப உறவுகளை குறிப்பாக உடன் பிறந்தவர்களை அனுசரித்துச் செல்வதால் கவலைகள் குறையும்.

இதனால் உடலில் இருந்த நோய்கள் நீங்கும். மனச் சஞ்சலங்கள், கவலைகள், கஷ்டங்கள் நீங்கி புதிய தெம்பு பிறக்கும். உங்கள் செல்வாக்கு கண்டு உறவினர்கள் கண் திருஷ்டி ஏற்படும். தடைப்பட்ட திருமண வாய்ப்புகள் கூடிவரும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தடைபட்ட பிரார்த்தனைகளும் வேண்டுதல்களும் நிறைவேறும்.

சிலருக்கு அவ்வப்போது ஞாபக சக்தி குறையும். கண், காது, மூக்கு தொடர்பான பாதிப்புகள் வரலாம். அடமானத்தில் இருந்த வீடு, வாகனம், நிலபுலன், நகை அனைத்தும் மீண்டு வரும். சிலர் உடன் பிறந்த சகோதர, சகோதரிகளின் குடும்ப பாரத்தை சுமக்க நேரும். திருமணத் தடை அகலும். அடிமட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயரும். கல்லூரி படிப்பை இடையில் நிறுத்திய மாணவ, மாணவிகள் மீண்டும் படிப்பை தொடர்வார்கள். மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் அறிவுரையை ஏற்றால் ஆனந்தமான வாழ்க்கை அமையும். சிலர் வாழ்க்கைத் துணையின் பெயரில் தொழில் தொடங்கலாம்.

**சனியின் சஞ்சார பலன்கள்**

2026 ஆம் ஆண்டு முழுவதும் வெற்றி ஸ்தானத்தில் சனி பகவான் சஞ்சரிப்பார். மீண்டும், மீண்டும் வெற்றி வாய்ப்புகள் குவியும். தொழில் வளம் சிறக்கும். அரசாங்க, வெளி நாட்டு வேலை முயற்சி சித்திக்கும். உத்தியோகத்தில் பணி நிரந்தரமாகும். தொழிலில் சக போட்டியாளர்களை சமாளித்து வெற்றி வாகை சூடுவீர்கள். வாழ்க்கைத் துணையால் நல்ல மாற்றமும் ஏற்றமும் உண்டு. தாராள தனவரவு வந்து கொண்டே இருக்கும். கொடுக்கல் வாங்கல் சுமூகமாகும். பங்கு வர்த்தகத்தில் நல்ல இலாபம் கிடைக்கும்.

வாகனம் வாங்க, வீடு கட்டும் பணி தொடர தேவையான நிதி உதவிகள் கிடைக்கும். சகோதர, சகோதரி பிணக்குகள் இருந்த இடம் தெரியாமல் மறையும். வாடகை வீட்டில் இருந்தவர்கள் சொந்த வீட்டிற்கு மாறுவார்கள். புதிய சொத்துக்கள் சேரும். புத்திர பிராப்தம் கிட்டும். வராக்கடன்கள் வசூலாகும்.

வறுமையில் வாடியவர்களுக்கு வாழ்வில் வசந்தம் வீசும். சிலர் மைத்துனருடன் இணைந்து புதிய கூட்டுத் தொழில் தொடங்கலாம். சிறு பிரச்சினைகளால் பிரிந்த நண்பர்கள், உறவினர்கள், சகோதர, சகோதரிகள் பகை மறந்து நட்பு கரம் நீட்டுவார்கள். வாழ்க்கைத் துணையால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். சாட்சி கையெழுத்து, ஜாமீன் கையெழுத்து போடுவதை தவிர்க்கவும். சிலரின் பிள்ளைகள் உயர் கல்வி அல்லது உத்தியோகத்திற்காக வெளியூர் செல்லலாம்.

**ராகு-கேதுவின் சஞ்சார பலன்கள்**

ஆண்டின் தொடக்கத்தில் தனம் வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகு பகவானும் அஷ்டம ஸ்தானத்தில் கேது பகவானும் சஞ்சரிக்கிறார்கள். தடை தாமதமான முயற்சிகள் காரிய சித்தியை ஏற்படுத்தி தரும். குடும்பத்திலும் நட்பு வட்டாரத்திலும் சுமூகமான நிலை நீடிக்கும். சொத்து, சுகம், தடையில்லாத வருமானம் என வாழ்வில் புதுவிதமான மாற்றங்கள் அதிகரிக்கும். குடும்ப சுமை குறையும். வீண் பிடிவாதம், முன் கோபம் குறையும். தர்ம சிந்தனையுடன் பிறருக்கு மனக்குறையோ, பாதகமோ இல்லாத நல்ல முடிவை எடுப்பீர்கள்.

இடப்பெயர்ச்சி செய்ய நேரும். பணம் கொடுக்கல் வாங்கல் சீராகும். வேற்று மொழி கற்பதில் ஆர்வம் அதிகரிக்கும். வேற்று மொழி பேசும் நண்பர்கள் கிடைப்பார்கள். அரசியல் வாதிகள் கவனமாக திட்டமிட்டு காய் நகர்த்த வேண்டிய காலம். வாக்கு ஸ்தானமான இரண்டாம் இடத்தில் நிற்கும் ராகு பகவான் நிறைவேற்ற முடியாத ஒரு வாக்கை கொடுக்க வைத்து எட்டாம் இட கேது மூலம் வம்பு வழக்கை வீட்டு வாசலில் நிறுத்துவார்.

வாக்குறுதியே உங்களை கட்டம் கட்டி நிற்க வைக்கும் என்பதால் வாக்கில் நிதானம் தேவை. கொள்கை கோட்பாட்டுடன் தூய்மையாக செயற் பட்டால் நிலைக்கலாம். நீடிக்கலாம். சந்தர்ப்பவாதியாக செயல்பட்டால் வீழ்ச்சியை சந்திப்பதில் சந்தேகம் இல்லை.




**உத்திராடம் 2,3,4**

மேன்மையான பலன்கள் உண்டாகும் வருடம். உங்களின் பேச்சுத் திறமையால் பிறரை ஈர்க்கும் சக்தி உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்கும். தொழிலில் சீரான முன்னேற்றம் இருக்கும். தொழில் வளர்ச்சி, உத்தியோக உயர்வு, வாழ்க்கை முன்னேற்றம் போன்ற அனைத்தும் சீராக அமையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊர் விட்டு ஊர் மாற நேரும். ஒரு சிலர் நாடு விட்டு நாடும் மாறலாம்.

திருமண யோகம் தாமதப்பட்டவர்களுக்கு திருமணம் நடந்தேறும். சிலருக்கு வேலை மாற்ற எண்ணம் அதிகரிக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் அமைப்பு உள்ளது. நீங்கள் விரும்பிய அப்பார்ட்மென்டில் விரும்பிய வீடு கிடைக்கும். உயர் கல்விக்கு விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். போதுமான பணம் கிடைத்தாலும் செலவுகளும் மிகுதியாக இருக்கும். திருமணத் தடை நீங்கும். பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனமாக செயல்பட வேண்டும். இந்த வருடத்தில் திருமண முயற்சி கைகூடும். கால பைரவரை வழிபடவும்.

**திருவோணம்**

வாழ்க்கையில் செட்டில் ஆகும் காலம் வந்துவிட்டது. உங்களின் லைப் ஸ்டைல் மாறப் போகிறது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு கைகூடும். கூட்டாளிகள் மற்றும் தொழிலாளிகளை அனுசரித்துச் சென்றால் நெருக்கடி நிலையை சமாளிக்க முடியும். இதுவரை வேலை இன்மை மற்றும் தொழில் ஏற்ற இறக்கத்தால் பொருளாதார நெருக்கடி மற்றும் மன உளைச்சலை சந்தித்த உங்களுக்கு பொருளாதார முன்னேற்றம் ஏற்பட போகிறது.

உங்களின் திடீர் வளர்ச்சி அண்டை அயலார் மற்றும் உற்றார் உறவினர்கள் மத்தியில் தனி அந்தஸ்த்தை பெற்றுத் தரும். பேச்சை தொழிலாக கொண்ட பெயர், புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். வெளிநாட்டு வேலை அல்லது தொழில் மூலம் பணவரவு மகிழ்வை தரும். வேற்று மத, இன அல்லது மொழி பேசுபவர்களின் நட்பு கிடைக்கும் அல்லது வாழ்க்கைத் துணை கிடைக்கலாம். அந்நிய மொழியை கற்பதில் ஆர்வம் மிகும். அந்நிய மொழி பேசுபவரால் குடும்பத்தில் நிம்மதி குறைவு ஏற்படலாம். பால்ய வயது குழந்தைகளுக்கு பேச்சு வருவதற்கு காலதாமதம் ஏற்படலாம். தினமும் கந்தசஷ்டி கவசம் படிப்பது கேட்பது நல்லது.

**அவிட்டம் 1, 2**

அசுப பலன்கள் குறைவாகவும் சுப பலன்கள் அதிகமாகவும் இருக்கும். ஒரு சிலருக்கு விபரீத ராஜ யோகம் செயல்பட்டு லாட்டரி, ரேஸ், பங்குச் சந்தை, இன்சூரன்ஸ் உயில் சொத்து மூலம் ஆதாயம் கிட்டும். தொழில், பணி அல்லது குடும்ப சூழல் காரணமாக தம்பதிகள் சிறிது காலம் பிரிந்து வாழலாம். திருமணம் நிச்சயமாகும். பெண்கள் விலை உயர்ந்த ஆபரணங்களை கவனமாக கையாள வேண்டும்.

பிரிந்த தாய், தந்தை மீண்டும் இணைவார்கள். கவனக்குறைவான செயல்களால் பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கம் ஏற்படலாம். அரசு அதிகாரிகளால் சிறு பிரச்சினை ஏற்படும். வம்பு, வழக்குகள் சாதகமாகும். உடல்நிலை தேறும். வாழ்க்கைத் துணையுடன் இருந்த பனிப்போர் மறையும். பொது வாழ்வில் இருப்பவர்களின் வெளிப்படையான பயமற்ற கருத்துகள் மக்கள் மத்தியில் நன்மதிப்பை அதிகரிக்கும்.

பெண்களுக்கு குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் மிகும். பெரிய தொகையை கடனாக கொடுக்கும் முன்பு பல முறை யோசிக்க வேண்டும். பெரிய முதலீடுகளை குடும்ப உறுப்பினர்களின் பெயரில் முதலீடு செய்வது நல்லது. குலதெய்வத்தை வழிபடவும்.

**பரிகாரம்:** பிரதோஷ காலங்களில் விரதம் இருந்து நந்தியையும் சிவபெருமானையும் வழிபட விருப்பங்கள் நிறைவேறும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

பட்டத் திருவிழா கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது.

நேற்றைய கொண்டாட்டத்தின் போது எதிர்பாராத விதமாக இளைஞர் ஒருவர் பட்டத்துடன் வானில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பல இளைஞர்கள் இணைந்து ஒரு பாரிய பட்டத்தை (கூட்டுப் பட்டம்) நீண்ட தொடுவைக் கயிறு (வடம்) மூலம் வானில் ஏற்ற முயற்சித்தனர்.

அப்போது வீசிய பலத்த காற்றினால் பட்டத்தின் விசை அதிகரித்து, வடத்தைப் பிடித்துக்கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவர் சடுதியாக வான் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டார்.

கீழிருந்த ஏனைய நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு, வடத்தை மெல்ல மெல்லக் கட்டுப்படுத்தி அந்த இளைஞரைப் பாதுகாப்பாகத் தரையிறக்கினர்.

இதேவேளை, கடந்த முறைகளிலும் பட்டத்துடன் இளைஞன் பற்றிய சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சட்டவிரோத...

பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண் சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரு பெண்களும் மாரவில நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு இம்மாதம் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## 23 இந்திய...

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 27ஆம் திகதி, ஜனவரி 2 மற்றும் ஜனவரி 3 ஆகிய திகதிகளில் கைதான மீனவர்களுக்கே இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கினை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகள் நெறிப்படுத்தினார்கள். இதன்போது இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

## கச்சதீவு...

ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27, 28ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

திருவிழாவுக்கான முதலாவது முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வருடமும் திருவிழாவுக்கான அனைத்துப் பணிகளை யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜெபரட்ணம் அடிகளாரின் வழிகாட்டுதலில் நெடுந்தீவு பங்குத் தந்தையும் கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல பரிபாலகருமான அருட்பணி பத்திநாதன் அடிகளார் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ்ப்பாணம்...

இதன் தாக்கம் காரணமாக யாழ். மாவட்டம் இதுவரை எதிர்கொள்ளாத அளவு பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (07) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உருவாகியுள்ள தாழ்வு மண்டலமானது, நாட்டின் கிழக்கு கடற்கரையை நோக்கி நகர உள்ளது. இது மணிக்கு 9 கிலோமீற்றர் வேகத்தில் நகரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்றும் வீசக்கூடும்.

குறிப்பாக 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜனவரி மாதத்தில் உருவாகியுள்ள 21ஆவது தாழ்வு மண்டலமாக அமைகின்றது. ஆனாலும் கடந்து சென்ற தாழ்வு மண்டலங்கள் விட இது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதாவது இதன் நகர்வுப் பாதை கடல் பகுதியாக இருந்தாலும் வடக்கு நோக்கி நகரும் போது தரையையும் ஊடறுத்துச் செல்லவுள்ளது. அத்துடன் மிகக் குறைந்தளவு வேகத்தில் நகர்வதால் எதிர்வரும் 8, 9 மற்றும் 10ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணம் பாரியளவு மழைவீழ்ச்சியை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.

அத்துடன் 9, 10ஆம் திகதிகளில் யாழ். மாவட்டம் மிக அதிக மழைவீழ்ச்சியை எதிர்கொள்ளவுள்ளது. இதன் தாக்கம் டித்வா புயலால் தென்பகுதி எதிர்கொண்ட பேரழிவுகளை விட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்க முடிகிறது.

துறைசார் அதிகாரிகள் இது தொடர்பில் துரித முன்னேற்பாடுகளை முன்னெடுப்பது சிறந்தது. எனவே பொது மக்கள் இந்த விழிப்புணர்வு எச்சரிக்கையை அவதானத்தில் கொண்டு தங்களது பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம் என அறிவுறுத்தியுள்ளார். (ம-7,33,104)

## கட...

மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இலங்கையின் தென் கிழக்கே வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றமுத்த தாழ்வுப் பகுதி, ஒரு காற்றமுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறி, பொத்துவிலிலிருந்து தென் கிழக்கே 700 கி.மீ தொலைவில் அட்சரேகை 4.9 வடக்கு மற்றும் தீர்க்கரேகை 87.4 கி அருகே மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேற்கு மற்றும் வட மேற்குத் திசையில் தீவின் கிழக்கு கடற்கரையை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்திற்குள் ஒரு ஆழமான காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக உருவாக வாய்ப்புள்ளது.

இதன் தாக்கம் இன்று (8) முதல் தீவில், குறிப்பாக வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழை நிலைமையை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை மற்றும் பொத்துவில் வழியாக அம்பாந்தோட்டை வரையிலான ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை தவிர்க்கப்பட வேண்டும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்துகிறது.

தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது எச்சரிக்கையாக இருக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

இன்று (8) முதல் மறு அறிவித்தல் வரை தீவைச் சுற்றியுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் 6067 — S 3 0 9 7 1 6
அத சம்பத — S 9 7 1 6 — சீட்டிழுப்பு இலக்கம் 0642
சுப தவசக் — திகதி 2026.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் 183 — தனுசு 13 23 65 — 0147
தன நிதானய — திகதி 2026.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் 2097 — U 06 09 34 64 U
மெகா பவர் — திகதி 07/01/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2415 — D 14 18 26 38 58
ஜய — திகதி 2026.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0335 — O 2 7 8 0
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4309 — சீட்டிழுப்பு திகதி 07.01.2026 — U 13 32 36 76 — U
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.01.07 — சீட்டிழுப்பு இலக்கம் 1376 — கும்பம் 26 34 50 62 கும்பம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா — 07.01.2026 — வெற்றி வாரம் 0775 — B 4 7 4 8 0 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,294,800.00
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3041 — சீட்டிழுப்பு திகதி 2026.01.07 — தினம் புதன்கிழமை — 33 46 49 58 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,643,106.40
சனிதா — திகதி 07.01.2026 — வெற்றி வாரம் 5202 — 02 09 49 61 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,524,102.80
சசிரி — வெற்றி வாரம் 871 — சீட்டிழுப்பு திகதி 07.01.2026 — புதன்கிழமை — 12 37 39 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
ராசி அதிர்ஷ்டம் — சீட்டிழுப்பு வாரம் 4753 — சீட்டிழுப்பு திகதி 07.01.2026 — தினம் புதன்கிழமை — 16 32 43 60 மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,770,602.80
லக்பிம — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — L 27 26 56 67 73 — 2217 — 07.01.2026 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.618,690,187.40
அட கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் 2867 — சீட்டிழுப்பு திகதி 2026.01.07 — 10 17 28 72 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,480,052.00
DLB Development Lotteries Board — National Lotteries Board


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் வாகன விபத்து

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் இருந்து பரந்தன் வீதியூடாக சென்ற வெகனார் ரக வாகனமும் அதே திசையில் பயணித்த பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று (07) இரவு 7 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் இருந்து பரந்தன் வீதியூடாக சென்ற வெகனார் ரக வாகனம், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் பிரதான வீதியிலிருந்து திரும்ப முற்பட்டவேளை அதே திசையில் வந்த பட்டா ரக வாகனம் மோதியதில் வெகனார் வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்துடன் தொடர்புடைய இரு வாகனங்களும் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

### டித்வா பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான

# புதிய வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் நாளை ஆரம்பம் - அநுர

டித்வா பேரிடரால் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்காக இழப்பீடு வழங்கும் மற்றும் புதிய வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் நாளை 9ஆம் திகதி அநுராதபுரம் மற்றும் குருநாகலில் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

10ஆவது பாராளுமன்றத்தின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டம் நேற்று பிற்பகல் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசின் செயற்திட்டத்தின் தற்போதைய நிலைமை மற்றும் மீள்குடியேற்றம் மற்றும் பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு வழங்கும் செயற்பாடு குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

துல்லியமான தரவுகள் மற்றும் உண்மையான புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இதற்கான இழப்பீட்டுத்தொகையை வழங்கும் நடவடிக்கையை விரைவுபடுத்துமாறு விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் என்பவற்றுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகர்களுக்காக செயற்படுத்தப்படும் கடன் திட்டம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. (ம-7)

### பல்வேறு குற்றங்...

பல்பொருள் அங்காடி உடைத்து திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் அங்கிருந்த CCTV காட்சிகள் மூலம் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் தலைமறைவாகியிருந்தார். இன்னிலையில் நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரிகளான வினோத் மற்றும் சார்ஜன் ராஜித ஆகியோரது தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது அவர் கைதாகியுள்ளார்.

குறித்த நபர் கைதாகும் போது அவரது உடமையில் ஹெரோயின் ரக போதைப் பொருளும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதே நேரம் குறித்த நபர் ஏற்கனவே இருவேறு வழக்குகளுக்காக நீதிமன்றால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

### ஊர்காவற்றுறை...

- ஊர்காவற்றுறை வழித்தடம் 780 தனியார் பேருந்து, பயணிகளுடன் ஊர்காவற்றுறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சமயம் அல்லைப்பிட்டி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த ஒருவர் பேருந்தை வழிமறித்து ஏறி, உனக்கு வாகனம் ஓட்டத் தெரியாதா எனக் கேட்டு சாரதி மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது சாரதி கடுமையாக தாக்குதலுக்குள்ளாவதை அவதானித்த பயணிகள் தாக்குதலாளியை பேருந்தில் இருந்து இறக்கியுள்ளனர்.

இதையடுத்து கடும் தாக்குதலுக்குள்ளான சாரதி பயணிகளுடன் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்துள்ளதுடன் தாக்கிய நபர் தொடர்பான விவரத்தையும் மக்களின் தரவுகளுடன் பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

கடுமையாக தாக்குதலுக்கான சாரதி ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாரதி தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்த தனியார் பேருந்து நிர்வாகத்தினர் குறித்த நபர் மீது நடவடிக்கை எடுக்கப்படாது விடின் நாளை 09 ஆம் திகதி தீவகத்தில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-7,33)

# சாரா ஜெஸ்மின் உயிருடன் இருப்பின் சர்வதேச பிடியாணை மூலம் கைது

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய புலஸ்தினி மகேந்திரன் (சாரா ஜெஸ்மின்) உயிருடன் இருக்க வாய்ப்புள்ளதாக விசாரணைகளின் மூலம் தகவல்கள் கிடைத்துள்ளதாகப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். சாரா ஜெஸ்மின் இறந்துவிட்டதாகக் கூறப்பட்ட போதிலும், அவர் உயிருடன் இருப்பதாகவே விசாரணைகள் உணர்த்துகின்றன. எனினும், அவர் தற்போது இந்தியாவில் தங்கியிருப்பதாக எந்தவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவைப்பட்டால் அவரை கைது செய்வதற்கான சர்வதேச பிடியாணையைப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார். (ம-7)

### பிரதமரைப்...

கொழும்பில் நேற்று முன்தினம் (06) நடந்த வாராந்திர அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தரம் 06 பாடத்திட்டத்தின் ஆங்கிலப் பாடத்தில் சர்ச்சைக்குரிய வலைத்தளம் இடப்பட்டமை பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில் கல்வி அமைச்சராகவுமுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய அதற்கு பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென பல்வேறு அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

எனினும் ஒரு பாடத் தொகுதியில் ஒரு வார்த்தை குறைபாட்டிற்காக கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவை பதவி விலக நிர்ப்பந்திப்பது நெறிமுறையற்றது.

கல்வி சீர்திருத்தங்களில் குறைபாடுகள் இருந்தாலோ அல்லது முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் நாட்டிற்கும் மாணவர்களுக்கும் எதிரானதாக இருந்தாலோ, சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி விலக வேண்டும்.

பாடத் தொகுதியில் உள்ள ஒரு வார்த்தையின் அடிப்படையில், பதவி விலகுமாறு கோருவது நியாயமற்றது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


**Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை**

01. வட்டுக்கோட்டை, இந்து, 1984, புனர்பூசம், Business Management, UK citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33794)
02. சாவகச்சேரி, இந்து, 1990, உத்திரட்டாதி, Graduate, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
03. வவுனியா - யாழ்ப்பாணம், இந்து, 1991, திருவோணம், Msc, UK citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
04. இணுவில், இந்து, 1985, திருவோணம், MBBS Doctor, UK citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (50313)
05. Jaffna - காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், Cashier, UK citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55026)
06. Jaffna, இந்து, 1991, அவிட்டம், Bsc, Software Developer, UK citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54855)
07. நல்லூர் - மானிப்பாய், இந்து, 1992, அவிட்டம், Medical Device Advisor, Canada citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53581)
08. புங்குடுதீவு - நவாலி, இந்து, 1990, பூரம், Graduate, Canada citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (42422)
09. அல்வாய், இந்து, 1999, ரேவதி, BBM, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (38005)
10. மீசாலை, இந்து, 1994, பூரம், Msc vetnary Doctor, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54467)

(C-4771)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193

**யாழ்ப்பாணத்தில் Voyzant**
கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்
◆ விமான பயணச்சீட்டுக்கள் ◆ பயணக் காப்புறுதி
◆ விசா சேவைகள் ◆ வெளிநாட்டு சுற்றுலா
மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(6308)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்குவோம்.
(C-4770)
076 825 7716 (ஆகாஸ்)

**வேலையாட்கள் தேவை**
வவுனியா / கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலரும் தேவை.
076 889 1308
077 606 1333
(1893)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.